

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள், நேற்று (8.2.2025) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில்; தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டினையொட்டி நடத்திய "கலைஞர் வசனம்/கவிதை ஒப்பித்தல் போட்டி"யில் மாநில அளவில் முதல் பரிசு பெற்ற மதுரை, அரசு நடுநிலைப் பள்ளி 4ஆம் வகுப்பு பயிலும் செல்வி மா.ஜாக்ஷிக்காவிக்கு ரொக்கப் பரிசாக ரூ.50,000/-மும் - இரண்டாம் பரிசு பெற்ற புதுக்கோட்டை இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளி 11ஆம் வகுப்பு பயிலும் செல்வி கு.மதிவதனிக்கு ரொக்கப் பரிசாக ரூ.30,000/-மும் - மூன்றாம் பரிசு பெற்ற சென்னை, சைதாப்பேட்டை, பாத்திமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி செல்வன் சா.இஜாஸ்அகமதுக்கு ரொக்கப் பரிசாக ரூ.25,000/-மும் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வின்போது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் - செயலாளர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், துணைச் செயலாளர்கள் திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன், மதுரை சி.வீரகணேசன், அ.ஜாகிர்உசேன் ஆகியோர் உடனிருந்தனர்.

### ஒன்றிய அரசு பாராமுகம்: எம்.பி.க்கள் போராட்டம்!

# தமிழ்நாட்டு மீனவர்களுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, பிப். 9-

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தாக்கப்படுவதும், கைது செய்து படகுகளை பறித்துச் செல்வதும் தொடர் கதையாக உள்ளது எனவும், இத்தகைய செயலைத் தடுக்காமல் ஒன்றிய அரசு பாராமுகம் காட்டுவதால் கழக எம்.பி.க்கள் மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். இனியாவது தமிழ்நாடு மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காக்க நிரந்தரத் தீர்வு காண வேண்டும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:

**இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதையும் கைது செய்யப்படுவதையும் தடுக்க ஒன்றிய அரசு தலையிட்டு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் பல கடிதங்கள் எழுதியும் ஒன்றிய அரசு பாராமுகமாகவே உள்ளது.**

**கைது செய்யப்பட்டுள்ள நமது மீனவர்கள் 97 பேரையும் பிடித்துவைக்கப் பட்டுள்ள 216 படகுகளையும் விடுவிக்கக் கோரி, தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற கூட்டணிக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று போராட்டம் நடத்தினர். ஒன்றிய அரசு உடனடியாக விழித்துக்கொண்டு, நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காக்க நிரந்தரத் தீர்வு காண வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர்- – அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!

கடலூர் பிப்.9.

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி மாவட்ட கழக அவைத்தலைவர் டாக்டர்.கொ.நந்த கோபால கிருஷ்ணன் தலைமையில் கடலூர் மேற்கு



மாவட்டச் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று (09.02.2025 - ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 2.30 மணியளவில் நெய்வேலி தொ. மு.ச. அலுவலகத்தில் நடைபெறுகிறது.

அதுசமயம், மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுகுழு, உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, நகரகழக, பேரூர் கழக செயலாளர்கள், கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிப்ரவரி 21.02.2025 மற்றும் 22.02.2015 ஆகிய இரண்டு நாட்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிதல், கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் ஒரு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் **ஒரு பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, பிப்ரவரி 4 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்**''என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருவள்ளூர் மத்திய மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு செ. சங்கர் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திருவள்ளூர் மத்திய மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக**

**திரு.செ. சங்கர்,**

1, மேட்டுத் தெரு, மாதிராவேடு,

திருவேற்காடு, சென்னை 600 077. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

``அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச்செயலாளர்,
நாள் : 08.02.2025. தி.மு.க.

# கே.வி.குப்பம் - பெருமாங்குப்பத்தில் இலவச மருத்துவ முகாம்!

### ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. – டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. பங்கேற்பு!

வேலூர், பிப். 9-

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம், கே.வி.குப்பம் பெருமாங்குப்பம் கூட்டு சாலை அருகே அமைந்துள்ள, விஜயா மருத்துவ மனையின் சார்பில், தமிழக முதல்வர், கழக தலைவர், தளபதி மு.க. ஸ்டாலின், அவர்கள் அமைச்சர் கழக பொதுச் செயலாளர் துரை முருகன் ஆகியோரின் வாழ்த்துகளோடு, தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு, மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் இன்று (9.8.2025) நடைபெறும்.

இந்த முகாம், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாநில துணை செயலாளர் கே.வி.குப்பம் சி.கோபி, ஒருங்கிணைக்க, மாவட்ட மருத்துவரணியின் துணை அமைப்பாளர், விஜய மருத்துவ மனையின் நிறுவனர் மருத்துவர் கோவி தூயவன் ஏற்பாட்டால் நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக, வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாநில ஆட்டோ ஓட்டுனர் சங்க தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம் கதிர் ஆனந்த் எம்.பி, துரை சிங்காரம், மாநில மருத்துவரணியின் துணை செயலாளர் மருத்துவர்.

இராசேசுவரி மோகன் காந்தி, கீ. வ.குப்பம் ஒன்றியங்களின் செயலாளர்கள் கே. சீதாராமன் (மேற்கு ஒன்றியம்) ஒன்றிய குழு தலைவர் எல் இரவிச்சந்திரன் (மத்திய ஒன்றியம்), இரா.முருகேசன் (கிழக்கு ஒன்றியம்), தலைமைச் செயற்குழு உறுப்பினர், வி.கே.ஆர்.சுந்தர வடிவேலு, தலைமை பொது குழு உறுப்பினர்கள் கே. தயாளமூர்த்தி, விடி.சிவகுமார், மாவட்ட மருத்துவரணியின் அமைப்பா ளர் மரு. நந்தகுமார், தலைவர் மரு. முகமது சாயி, மற்றும் விடி, ஜெயக்குமார், சா.பரிமளம், இரா. தமோதரன், வெ.ஜெயராஜ்,ப மடங்கி பாரதி வெங்கடேன், எம். அசோக்குமார், கவிதாசுதா சேகர், ஏழ்மைநாதன், நளினி ராமமூர்த்தி, கட்டுக்கல் பாஸ்கர், ஜி. இளங்கோ, சி.மார்கு, கே.குப்பன், கீழ்புதூர் வெங்கடேசன், வி. எத்திராசன், சி. மதியழகன், வழக்கறிஞர்கள், ஜி.விஜயக் குமார் எஸ்.மோன்ராஜ் சா.குமரன்,ஊ.மன்ற தலைவர் எஸ்.மோகன் (ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்) சேத்து வண்டை சத்யா, இரகு, இரா.முரளி, கா.சுரேஷ், ஆசிரியர் இரவி, வீரா .குமரன், மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

முடிவில் கழக ஊடக செயல்பாட்டளார் கோவி. அழகிரி நன்றி கூறுகிறார்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

# மீஞ்சூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், மீஞ்சூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பா.சுகுமாறன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற மு. முரளிதரன்(71, அன்பு இல்லம், பள்ளிப்பாளையம், தேவம்பட்டு அஞ்சல், பொன்னேரி, மீஞ்சூர் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் - 601 204) அவர்கள் மீஞ்சூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

" அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச்செயலாளர்,
நாள் : 08.02.2025. தி.மு.க.

### முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் மனைவி

# திருமதி எழிலினி சுந்தரம் மறைவு!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 9-

முன்னாள் அமைச்சர் (நினைவில் வாழும்) க.சுந்தரம் அவர்களின் மனைவி திருமதி எழிலினி சுந்தரம் அவர்கள் மறைவுற்றார்.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சரும், கழக ஆதி திராவிடர் நலக்குழுவின் முன்னாள் தலைவரும், கழக மூத்த முன்னோடியுமான (நினைவில் வாழும்) க.சுந்தரம் அவர்களின் துணைவியார் திருமதி எழிலினி சுந்தரம் அவர்கள், நேற்று முன்தினம் (7.2.2025 - வெள்ளிக்கிழமை) இரவு உடல் நலக்குறைவு காரணமாக தமது 70வது வயதில் இயற்கை எய்தினார் எனும் செய்தி கேட்டு துயருற்றேன்.

அன்னாரின் மறைவுக்கு க.சுந்தரம் - எழிலினி இணையரின் குடும்பத்தினர், கழகத்தினர், அவரது உறவினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்.கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025






திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி மாநில ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் முன்னாள் அமைச்சர் மறைந்த க.சுந்தரம் அவர்களின் மனைவி திருமதி.எழிலினி சுந்தரம் அவர்கள் இயற்கை எய்தினார். அவர்களது உடலுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.இதில் கழகத்தினர் உடனிருந்தனர்.